1972 மார்ச் 11]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே இலவசமாக குடை வழங்கும் திட்டம் இல்லை என்றாலும் மழைகாலங்களில் அவர்கள் சிறப்பாகப் பணிபுரிவதற்கு மழைக் கோட்டுகளையாவது வாங்கிக் கொடுத்து அவர்களிடம் இருந்து அதற்கான தொகையை மாதத் தவணைகளில் திரும்பப்பெற அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அவர்களுக்கு இலவசமாகப் பயணம் செய்ய பேருந்துகள் இருக்கிற காரணத்தினால் இலவசமாக குடைகள் வழங்க வேண்டிய அவசியம் இல்லை, மழைக்கோட்டும் அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

கோயில்களின் கணக்குகள் தணிக்கை.

* 449. வினா—திரு. கே. ரங்கநாதன் : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறநிலையத்துறைக்கு உட்பட்ட ஆலயங்களின் வரவு செலவுக் கணக்குகள் அதிகாரிகளால் தணிக்கை செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம்.

திருவரங்கம் கோயில் வருமானம்

* 450. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவரங்கம் கோயிலின் வருமானத்தைக்கொண்டு மருத்துவமனை, கல்விச்சாலை ஏற்படுத்துவது போன்ற பொது நலப் பணிகள் எவையேனும் நடைபெறுகின்றனவா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]